# மாணிக்கவாசகர் பாடல்களில் அகம்

61

**அ.கோ.ஸ்ரீதேவி**
**உதவிப் பேராசிரியர்**
**பாரத் கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
**சேலையூர்.**

**ஆய்வுச்சுருக்கம்**

பன்னிரு திருமுறைகளில் எட்டாம் திருமுறையாக விளங்கும் நூல் திருவாசகமும் , திருக்கோவையாரும் ஆகும்.திருவாசகம் 51 பகுதிகளை கொண்டுள்ளது. இதில் அகத்துறை செய்திகளை உள்ளடக்கிய பாடல்கள் பல இருக்கிறது. தலைவனது பிரிவினை ஆற்றாளாகிய தலைவி தலைவனுடைய பெயர் , ஊர் முதலியவற்றைப் பிறர் சொல்லக் கேட்பினும் , அவனைக் கூடி மகிழ்ந்ததைப் போலும் இன்பமுண்டாகும் என்ற நினைவினளாய் , கிளியை நோக்கி அவற்றைக் கூறுமாறு வேண்டிக் கொள்வதாக பாடல்கள் அமைந்துள்ளன.திருக்கோவையாரில் அகத்திணைத்துறைகள் அமைந்த நானூறு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. செய்யுள் ஒவ்வொன்றற்கும் தனித் தனிப் பெயரில் துறைகள் கூறப்பட்டுள்ளன.

**முன்னுரை**

மாணிக்கவாசகர் சைவ சமய குரவர் நால்வருள் ஒருவராக வைத்து வணங்கபடுபவர்.
இவர் இயற்றிய திருவாசகத்தில் பெண்கள் விளையாடும் விளையாட்டை மையமாகக் கொண்டு பல அகப்பாடல்கள் இடம் பெற்றுள்ளன.தலைவனின் பிரிவை ஆற்றாத தோழி தன்மனஎண்ணங்களை பறவைகளிடம் கூறிஆறுதல் அடையும் செய்தியும் இடம் , திருக்கோவையாரில் நாயகன் நாயகி பாவனையில் இறைவனையும் ஆன்மாவையும் வைத்து மாணிக்கவாசகர் வெளிப்படுத்திய செய்தியையும் இக்கட்டுரை வழி காணலாம்.

**தலைவியின் கூற்று**

திருவாசகத்தில் இடம்பெற்றுள்ள அகத்துறைப் பதிகங்களையும் , பாடல்களையும் மகளிர் விளையாடும் நிலையில் பாடும் பாடல்களாகவும் , கூற்றமைப்பில் அமைந்துள்ள பாடல்களாகவும் , காமம் மிக்க கழிபடர் கிளவிகளாகவும், வகைப்படுத்தப் பெறுகின்றன. இவை ஆற்றாமை மிக்க தலைவியின் கூற்றுக்களாக அமைந்துள்ளன. 1**(பழ.முத்தப்பன், திருமுறைகளில் அககோட்பாடு.பக்.67)**

மணிவாசகப்பெருமான் மகளிர் விளையாடும் விளையாட்டுகளின் போது பாடிய பதிகங்கள் பலவாகும். அவற்றுள் அகப்பொருள் பொதிந்த பதிகங்களாக அமைந்தவை. திருப்பொற்சுண்ணம் , திருச்சாழல் ஆகியவையாகும். திருப்பொற்சுண்ணம் என்ற பதிகம் , மகளிர் ஒன்று கூடி நறுமணப் பொருள்கள் பலவற்றை உரலில் இட்டு இடித்து நறுமணப் பொடி செய்யும் பொழுது பெண்கள் பாடுவதாக அகப்பொருள் நெறியில் பாடப்பட்டுள்ளது. பருவம்கண்டு ஆற்றாளாகிய தலைவியைத் தோழி தலைவர் வருவார் என்று கூறி ஆற்றுப்படுத்துவதாக இச்சுண்ணப் பகுதி அமைந்துள்ளது.

'திருச்சாழல்' என்ற பதிகம் மகளிர் விளையாட்டு அமைப்பில் அமைந்த அகப்பொருள் பதிகமாகும். மகளிர் தோளை வீசி ஆடும் ஒருவகை ஆடல் சாழல் என அறியமுடிகிறது. சாழல் விளையாட்டின் போது மகளிர் உரையாடல் நிகழ்த்தும் வகையில் இப்பதிகம் அமைக்கப்பெற்றுள்ளது.

"தென்பால் உகந்தாடும் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடி" என்று தலைவி, தலைவனை இயற்பழித்தலும்,
"பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்

விண்பால் யோ(கு) எய்தி வீடுவர்காண் சாழலோ " 2**(திருவாசகம், திருச்சாழல், பக்.9)** என்று தோழி இயற்படமொழிதலும் ஆக, தடைவிடை முறையில் இப்பதிகம் அமைந்துள்ளது.

**கூற்றமைப்பு**

தலைவனது பிரிவாற்றாமையால் வருந்தும் தலைவி , கிளி, கோத்தும்பி, குயில் ஆகியனவற்றிடம் கூற்று நிகழ்த்துகிறாள். தலைவனது பிரிவினை ஆற்றாளாகிய தலைவி தலைவனுடைய பெயர் , ஊர் முதலியவற்றைப் பிறர் சொல்லக் கேட்பினும் , அவனைக் கூடி மகிழ்ந்ததைப் போலும் இன்பமுண்டாகும் என்ற நினைவினளாய் , கிளியை நோக்கி அவற்றைக் கூறுமாறு வேண்டிக் கொள்வதாகத் 'திருத்தசாங்கம்' என்ற பதிகம் அமைந்துள்ளது."

இப்பதிகம் தூதுவிடும் பாங்கினதாக அமையவில்லை. தலைவனது பெருமைகளைப் பிறர் கூறக் கேட்டு மன ஆறுதல் அடைதலே, தலைவியின் நோக்கமாக உள்ளது.

'திருக்கோத்தும்பி' என்ற பதிகம் தலைவன் மீது காமம் மிக்க தலைவி , 'கோத்தும்பி' என்னும் அரச வண்டினைப் பார்த்து தன் ஆற்றாமையைக் கூறும் பகுதியாக அமைந்துள்ளது. தலைவி அரச வண்டினைப் பார்த்து இருவகையில் கூற்று நிகழ்த்துகிறாள்.

1. தலைவனின் பெருமையெல்லாம் கூறி, எல்லோரும் கேட்கும்படி ஊது என்கிறாள்.
2. தலைவனிடமே சென்று ஊது என்கிறாள்.

இக்கூற்றுக்கள் மூலம் தலைவி தான் தலைவனுக்கே ஆட்பட்டேன் என்பதை வெளிப்படுத்த விரும்புகிறாள் என்பதை அறியமுடிகிறது.

குயிற் பத்து என்ற பதிகம் தலைவனது பிரிவாற்றாமையால் வருந்தும் தலைவி , குயிலை நோக்கி,

"கீதம் இனிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான்
பாதம் இரண்டும் வினவின் பாதளம் ஏழினுக்(கு) அப்பால்
சோதி மணிமுடி சொல்லின் சொல்லிறந்து நின்ற தொன்மை
ஆதி குணம் ஒன்றும் இல்லான் அந்தம் இல்லான்வரக் கூவாய்'

என்று வேண்டுவதாக அமைந்துள்ளது. இப்பதிகம் தூதிலக்கிய மரபிற்குச் சிலவிடங்களில் பொருந்தியுள்ளது.

அன்னைப் பத்து என்ற பதிகம் தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கும் பகுதியாக அமைந்துள்ளது.

"நித்த மணாளர் நிரம்ப அழகியர்
சித்தத்(து) இருப்பரால் அன்னே என்னும்
சித்தத்(து) இருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்தர்ஆ னந்தரால் அன்னே என்னும்" 3**(திருவாசகம்,அன்னைப்பத்து,பா.3)**

என்று தலைவியினது கூற்றைத் தோழி கொண்டெடுத்து மொழிந்து செவிலிக்கு அறத்தொடு நிற்பதாக இப்பகுதி அமைந்துள்ளது.

இதில் உள்ள பத்துப் பாடல்களிலும் தோழி , தலைவியின் நிலையை, 'அன்னே என்னும், அன்னே என்னும்' என்று கூறுகிறாள். இப்பதிகத்தில் தலைவிக்கு தலைவன் மீது உள்ள வேட்கைநிலை வெளிப்படுத்தப் பெறுகிறது.

**திருக்கோவையார் :**

திருக்கோவையார், அகத்துறை நூலுக்கு ஓர் எடுத்துக்காட்டாக எழுந்த நூல் எனலாம். "மணிவாசகர் பெற்ற சிவானுபவத் திறங்கள் ஆகிய பேரின்பத்தையே நம்பனோர் உணர்தற்பொருட்டு , நாம் அறியும் எளிய சிற்றின்பச் செய்திகளாக உலகியல் நிலையில் வைத்து விளக்குவது திருக்கோவையார் " 4 **(ந. ரா. முருகவேள்,காமஞ்சான்ற ஞானப்பனுவல்,ப.60)**

தலைவன் என்பவன் இறைவனாகவும் தலைவி என்பவள் உயிராகவும் கொண்டு , 'இறைவனை உயிர் அடைந்தின் புறுதலே தலைவனைத் தலைவி யடைந்து இன்புறுதல் ' என்றும், தலைவன் தலைவியையடைய வேண்டிப் பலவாறு வந்து போதல் , இறைவன் உயிரின் பொருட்டு இரங்கி வந்தாட் கொள்ளுதல் என்றும் பேரின்பப் பொருள் கூறுவர். "திருக்கோவையார்ப் பாடல்களில் எங்கும் அப்படித் தத்துவப்பொருள் காணுவதற்கான குறிப்புகள் இல்லை. எனவே திருக்கோவையார் ஒரு சிறந்த இலக்கிய நூல் என்ற அளவில் அமைவதே நன்று"5**(சிவலிங்கனார், எட்டாம்திருமுறை,ப.114)**

இறைவனின் பெருமையும் , கோயில் என்று வழங்கப்பெறும் திருச்சிற்றம்பலத்தின் திருக்கோவையார் பெருமையும் பேசும் வண்ணம் தில்லைக் கூத்தனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு கிளவித் தலைவனின் அகவாழ்வைப்பாடும் நிலையில் அமைக்கப்பெற்ற இலக்கிய நூல் என்று கொள்ளுதலே பொருத்தமானதாகும்.

**திருக்கோவையாரின் அமைப்பு முறை**

பன்னிரு திருமுறைகளுள் ஆன்மீகத்தின் அடித்தளத்தில் உருவாக்கப்பெற்ற இலக்கியங்கள் பலவற்றுள் திருக்கோவையார் தனிச்சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். இவ்விலக்கியம் ஆன்மீகத்தின் மையத்தளத்தில் உருவாக்கப்பட்டிருப்பினும் அக இலக்கிய மரபுகளை விரித்து நோக்க வேண்டும் என்ற உட்கிடக்கையோடு உருவாக்கம் பெற்றுள்ளது. பன்னிரு திருமுறைகளுள் நானூறு அகத்துறைகளாகப் பகுத்துக்கொண்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

தனித்தனி நிகழ்ச்சிகள் துறைகள் எனப்படும். அத்துறைகளின் ஒழுங்கே கோவை எனப்படும்.

தலைவன், தலைவி முதலான அகமாந்தர்கள் பேச்சு நிகழும் இடங்களே தொல்காப்பியத்துள் அகப்பொருள் சார்பான இயல்களில் தொகுக்கப்பட்டுள்ளன. முதன்முதலாக , இந்நூலில் அக்கிளவிகள் வகைப்படுத்தப் பெற்று துறைகளாகத் தொகுக்கப் பெற்றுள்ளன. பொருள் தொடர் நிலையாக அகத்திணைத்துறைகள் அமைந்த நானூறு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. செய்யுள் ஒவ்வொன்றற்கும் தனித் தனிப் பெயரில் துறைகள் கூறப்பட்டுள்ளன. குறிஞ்சி , முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்திணை ஒழுகலாறுகளும் ஒருங்கேயமையப் பாடப்பெற்றமை பற்றி இந்நூல் 'ஐந்திணைக் கோவை ' எனவும் வழங்கப்படும்.

திருக்கோவையாரில், இயற்கைப் புணர்ச்சி , பாங்கற்கூட்டம், இடந்தலைப்பாடு, மதியுடம்படுத்தல், இருவரும் உள்வழி அவன் வரவுணர்தல் , முன்னுற உணர்தல், குறையுற

சொன்னச் சொற்களை துதிப்போர் அல்லது துதித்தலைக் கேட்போருடைய துன்பம் நீங்கும் என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. பதிகப் பயனில் தாய் மொழி , இளையாள் மொழி என்பது போன்ற சொற்களால் யார் கூற்று வாயிலாகப் பதிகம் அமைந்துள்ளது என்பதும் தெளிவு படுத்தப்பெற்றுள்ளது.

**திருவிசைப்பா**

தேவார காலத்தில் தொடங்கிய இறைமைக் காதலைப் பாடுதல் என்ற அகப்பொருண்மை நெறி , மிகுந்திருந்த ஒரு கால கட்டமாகத் திருவிசைப்பா காலம் திகழ்கிறது. திருவிசைப்பா பாடிய பெருமக்கள் ஒன்பதாம் நூற்றாண்டிற்கும், பதினோராம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர் ஆதல் கூடும் என அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

தேவாரத் திருவாசகங்கள் தோன்றிய பின்னர் பக்தியியக்கப் பாடல்கள் ஒன்றரை நூற்றாண்டுக் காலம் தோன்றவில்லை. இடைக்காலத்தில் காளாமுகர் என்ற சைவர்களின் செல்வாக்கு வலுப்பெற்றுள்ளது. காளாமுகர் தொல்லையை எதிர்த்துப் புரட்சி நடத்திய கருவூர்த்தேவர் முதலான திருவிசைப்பா ஆசிரியர்கள் , மூவர் முதலிகள் மேற்கொண்ட இசைப்பாவால் சமயம் வளர்க்கும் வழியையே மேற்கொண்டனர் .

இவர்கள், இறைவனின் மேனி அழகை வருணித்து , அழகுணர்ச்சியை அதிகப்படுத்தி , அன்பு நெறியை வளர்க்க, தேவாரக் காலத்தைக் காட்டிலும் அதிகப் படியான அகம் சார்ந்த பாடல்களைப் பாடினர். திருவிசைப்பா அகப்பாடல்கள் இறைவன் திருவுரு அழகில் ஈடுபட்டுப் பாடப்பெற்றவை எனலாம்.

**முடிவுரை**

மாணிக்கவாசகர் கடவுளிடம் கொண்ட காதலை எடுத்தியம்பும் நூல் திருவாசகம். இது மனித இயல்புக்கும் மேம்பட்ட தெய்வீக காதலைப் பற்றிய நூல் எனலாம். தம்மைவிட தமக்கு மிகவும் அன்யோன்யமாக உள்ள கடவுளிடம் அவர் சரணாகதி அடைந்ததைக் கூறும் நூல்இறைவனின் பெருமையும் , கோயில் என்று வழங்கப்பெறும் திருச்சிற்றம்பலத்தின் பெருமையும் பேசும் வண்ணம் தில்லைக் கூத்தனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அமைந்த நூல் திருக்கோவையார்.